கர்நாடக வனப்பகுதியில் 3 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டது கண்டனத்துக்குரியது!

# மேகதாது விவகாரம் போல் வாய்மூடி இருக்காமல் கர்நாடக அரசுக்கு கண்டனத்தைப் பதிவு செய்திட வேண்டும்!

## த.வெ.க. அரசுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்!

சென்னை, ஆக.17-

கர்நாடக வனப்பகுதியில் 3 தமிழர்களை அம்மாநில வனத்துறை சுட்டுக் கொன்றிருப்பது கண்டனத்துக்குரியது என்று தெரிவித்துள்ள கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "மேகதாது விவகாரம் போல வாய்மூடி இருக்காமல், இச்சம்பவத்தில் த.வெ.க. அரசு கர்நாடக அரசுக்கு தனது கண்டனத்தைப் பதிவு செய்திட வேண்டும்" என்று தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



இது குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

கர்நாடக வனப்பகுதியில் தமிழர்கள் மூவரை அம்மாநில வனத்துறையினர் அநியாயமான முறையில் சுட்டுக் கொன்றிருக்கும் சம்பவம் அதிர்ச்சியளிக்கிறது. மனித உயிர்கள் குறித்த எந்த மதிப்பும் இல்லாமல் நிகழ்த்தப்பட்டிருக்கும் இந்தக் கொடூரச் செயல் கடும் கண்டனத்துக்குரியது.

குற்றமிழைத்தவர்களைக் காப்பாற்றுவதற்கான முயற்சிகளில் கர்நாடக வனத்துறையினர் ஈடுபடுவதாகத் தெரிகிறது. அது தவிர்க்கப்பட்டு, இதனைக் கொலை வழக்காகப் பதிந்து, வெளிப்படைத் தன்மை மிக்க, பாரபட்சமற்ற நீதி விசாரணை நடைபெற்று இதற்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். அப்போதுதான் இனி இப்படி ஒரு குற்றத்தில் ஈடுபடும் துணிச்சல் எவருக்கும் வராது.

மேகதாது விவகாரம் போல இதிலும் வாய்மூடி இருக்காமல், இச்சம்பவத்தில் தமிழ்நாடு அரசு கர்நாடக அரசுக்குத் தனது கண்டனத்தைப் பதிவுசெய்திட வேண்டும்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு உரிய இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுத் தருவதோடு, அவர்களுக்கு அரசுப் பணியும் கிடைக்கச் செய்ய தமிழ்நாடு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்."

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.




சென்னை கிழக்கு மாவட்டம் கொளத்தூர் கிழக்கு பகுதியில் போராளி ஓய்வதில்லை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி மாபெரும் மருத்துவ முகாம் போராளி 6மக்கள் நலனே முதன்மையானது அதுவே கலைஞரின் எண்ணமானது எனும் தலைப்பில் 16.08.2026 சென்னை, செம்பியம் தீட்டி தோட்டத்தில் உள்ள செம்பியம் வியாபாரிகள் சங்கத்தில் பகுதிக் கழக செயலாளர் ஐ.சி. எஃப்.வ. முரளிதரன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் மருத்துவ முகாமை சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் பி.கே. சேகர்பாபு, கழக சட்டத்திட்ட திருத்த குழு செயலாளர் இரா கிரிராஜன்.எம்.பி. துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# நூறாவது நாள்!

ஊழலை
ஒழிச்சாச்சு

ஒருலட்சம்
கோடி முதலீட்டை
ஈர்த்தாச்சு..

அரிசிவெலைய
அமுக்கியாச்சு

பருப்பு வெலைய
பதுக்கியாச்சு

மின் கட்டணத்த
கொறச்சாச்சு

மேகதாதில்
அணை
கட்டுவதை

மெனக்கெட்டு
தடுத்தாச்சு…

பாலியல்
குற்றங்களை
கொறச்சாச்சு

பனையூரு
சந்தைக்கு

குதிரை
வரத்தை

சுருக்கியாச்சு..
முத்தமிழுக்கு
மூணாம் இடம்
ஒதுக்கியாச்சு

நான்காம்
தூண்
ஊடகத்தை

நடுத்தெருவுல
நிறுத்தியாச்சு..

பழநிமலை
முருகனுக்கும்
பயத்தை
கொடுத்தாச்சு

பண்ணையாட்கள்
எல்லோருக்கும்
பதவிகளும்
ஒதுக்கியாச்சு

அப்புறமென்ன

வழக்கம் போல

ஆறு நாள்
ஓடாத
படத்துக்கு

நூறாம் நாள்
விழாவென்னு

கூசாம கூவ
கூலிகளை
கூட்டியாச்சு

அருவருப்பு
காட்சிகளை
அமோக
ஆட்சியின்னு
ஆல வட்டம்
வீசத்தான்
அட்வான்ஸும்
கொடுத்தாச்சு

அப்புறமென்ன

அடுத்த
ரெண்டு
நாளைக்கு

ரீல்ஸ் தான்

மீம்ஸ் தான்….

என்னநாஞ் சொல்றது



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்

சென்னை ரிப்பன் கட்டட வளாகத்தில்

# 80ஆவது சுதந்திர தின விழா! தேசியக் கொடி ஏற்றல்!

## மேயர் ஆர்.பிரியா 180 அலுவலர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கினார்!

சென்னை,ஆக.17-

பெருநகர சென்னை மாநகராட்சியில் இன்று (15.08.2026) 80ஆவது இந்திய சுதந்திர தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். இதனைத் தொடர்ந்து, மூவர்ண பலூன்களை விண்ணில் பறக்க விட்டார்.



தொடர்ந்து, மாண்புமிகு மேயர் அவர்கள் தேசிய மாணவர் படையினர், சாரண, சாரணியர் மற்றும் பேண்டு, வாத்தியக்குழுவின் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியின் சஞ்சீவ ராயன் தெரு, புழல், கிருஷ்ணாம்பேட்டை, பூத்தப்பேடு, கோயம்பேடு மற்றும் ஜல்லடியான் பேட்டை சென்னை நடுநிலைப்பள்ளிகளின் மாணவ, மாணவிகள், குரு வித்யாஷ்ரம் சிறப்புப் பள்ளியைச் சார்ந்த மாற்றுத்திறன் கொண்ட மாணவ, மாணவிகளின் கண்கவரும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

பின்னர், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மிக அதிகமாக சொத்துவரி செலுத்திய 3 நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கும், வட்டாரங்கள் அளவில் உரிய காலங்களில் முறையாக தாமதமில்லாமல் சொத்துவரி செலுத்திய 3 சொத்து உரிமையாளர்களுக்கும் பாராட்டுக் கடிதங்களை (Letter of Appreciation) மேயர் அவர்கள் வழங்கிப் பாராட்டினார். தொடர்ந்து, மாவட்ட அளவிலான சிறந்த பகுதி கூட்டமைப்பு மற்றும் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு "மணிமேகலை விருதுகள்" வழங்கிப் பாராட்டினார்.

தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சியில் சிறப்பாகப் பணியாற்றிய வடக்கு, தெற்கு மற்றும் மத்திய வட்டார துணை ஆணையாளர்கள் உள்ளிட்ட 180 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கிப் பாராட்டினார்.

மேலும், தேசிய மாணவர் படை, சாரண சாரணியர்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அனைத்து மாணவ, மாணவியருக்கும் பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கினார்.


